Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 90 · சனிக்கிழமை Saturday · 31.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# இடைக்கால பட்ஜெட்: பிப்ரவரில் 5ல் தமிழக அமைச்சரவைக் கூட்டம்



தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் வரும் பிப்ரவரி 5-ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ளது. இடைக்கால பட்ஜெட்டில் என்னென்ன அறிவிப்புகளை வெளியிடலாம் என்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டப் பேரவை தேர்தலுக்கு இன்னும் ஒரிரு மாதங்களே உள்ள நிலையில், கூட்டணி, தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஆளும் திமுக தீவிரம் காட்டி வருகிறது. ஆட்சியில் பங்கு என்ற கோஷத்தை காங்கிரஸ் கையில் எடுத்துள்ள போதிலும், அது திமுக கூட்டணியில் இருந்து விலகாது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, தேமுதிக, ராமதாஸ் தலைமையிலான பாமக உள்ளிட்ட கட்சிகளை தங்கள் கூட்டணியில் சேர்க்க திமுக மும்முரம் காட்டி வருகிறது.

அதே போல, எதிரணியில் இருக்கும் அதிமுகவும் பாஜக, பாமக (அன்புமணி), அமமுக மற்றும் பல சிறிய கட்சிகளின் ஆதரவோடு கூட்டணி அமைத்துள்ளது

இது தவிர, தற்போதைய தேர்தல் களத்தில் விஜய்யின் தவெகவும், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் உள்ளன.

இந்த சூழலில், தமிழ்நாடு சட்டப் பேரவை பிப்ரவரி மாதம் கூடவுள்ளது. இந்த சட்டப் பேரவைக்கு மே மாதம் வரை மட்டுமே அவகாசம் இருப்பதால், முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்ய முடியாது. இதனால், இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளது. பிப்ரவரி 13 அல்லது 14ஆம் தேதியன்று இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

சட்டப் பேரவை தேர்தல் நெருங்கியுள்ளதால், இந்த பட்ஜெட்டில் பல தரப்பு மக்களை கவரும் வகையிலான கவர்ச்சிகரமான அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.குறிப்பாக, பெண்கள், மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், நடுத்தர மக்கள் ஆகியோரை கவரும் வகையிலான அறிவிப்புகள் வெளியாகும் எனக் கூறப்படுகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டால், எந்த அறிவிப்பையும் தமிழக அரசால் அறிவிக்க முடியாது. எனவே, இந்த இடைக்கால பட்ஜெட் தாக்கலை, இதற்கான வாய்ப்பாக அரசு பயன்படுத்திக்கொள்ளும் எனத் தெரிகிறது.

இருந்த போதிலும், இது முழுமையான பட்ஜெட் கிடையாது. 2026 ஜூன் மாதம் பதவியேற்கும் புதிய அரசே, ஜூலையில் முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யும்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வரும் பிப்ரவரி 5ஆம் தேதி பிற்பகல் 12 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இடைக்கால பட்ஜெட்டில் என்னென்ன அறிவிப்புகளை வெளியிடுவது, மக்களுக்கு சலுகைகளை அறிவிக்கலாமா? என்பது உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# த.வெ.க. தலைவர் விஜய் ரசிகர்களை மட்டுமே நம்பியுள்ளார்

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு



தவெக தலைவர் விஜய் முழுக்க முழுக்க ரசிகர்களை மட்டுமே நம்புவதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இதுவரை ஒரு தேர்தலை கூட விஜய் சந்திக்கவில்லை என்று கூறிய எடப்பாடி பழனிசாமி, ஒரு தேர்தலிலாவது போட்டியிட்டு வாக்கு சதவிகிதத்தை நிரூபிக்கட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

என்டிடிவியின் தமிழ்நாடு சம்மிட் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. சட்டசபைத் தேர்தல் நெருங்கிவிட்ட சூழலில், அரசியல் பிரமுகர்கள் தங்களின் கருத்துக்களை அதில் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைந்த இந்த நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர்கள் டிஆர்பி ராஜா, அன்பில் மகேஷ், கார்த்தி சிதம்பரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் ஒரே குடும்பம் அதிகாரத்தில் இருப்பதை தான் மக்கள் வெறுக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஊழல் தான் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. எது சிறந்த ஆட்சி என்பதை மக்கள் ஜெயலலிதா தலைமையில் நடந்த ஆட்சியில் கண்டு உணர்ந்தனர். திமுகவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தலைமை பொறுப்புக்கு வர முடியும். ஆனால் அதிமுகவில் அப்படி கிடையாது. யார் உண்மையாக உழைக்கிறார்களோ, அவர்கள் முதல்வராக முடியும். வாரிசு அரசியலை முடிவுக்கு கொண்டு வர மக்கள் முடிவு செய்துவிட்டார்கள். செந்தில் பாலாஜியை அருகில் வைத்துக் கொண்டு ஸ்டாலின் ஊழல் பற்றி பேசுகிறார். எங்களை எதிர்கொள்ள முதல்வர் ஸ்டாலினுக்கு தைரியம் கிடையாது. அதன் காரணமாக என்டிஏ கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார். என்டிஏ கூட்டணி தேசிய அளவில் பாஜகவால் உருவாக்கப்பட்டது. அதற்கு தமிழ்நாட்டில் அதிமுக தான் தலைமை. அதனை அமித்ஷாவும் கூறிவிட்டார். பாஜக கூட்டணியில் இணைவ எங்களுக்கு எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

இவ்வளவு பேசும் திமுக, 1999 லோக்சபா தேர்தலில் ஏன் பாஜகவுடன் கூட்டணி அமைத்தது? கூட்டணி என்பது தேர்தலுக்காக மட்டும்தான். இங்கே கொள்கை மட்டுமே நிரந்தரம். சட்டசபைத் தேர்தலுக்கு அதிமுக தயாராகிவிட்டது. 180 தொகுதிகளில் கூட்டங்களை நடத்தி தயாராக இருக்கிறோம். மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டும். ஒற்றைகருத்துடைய கட்சிகள் இணைய வேண்டும். அதேபோல் விஜய் சிறந்த நடிகர் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. விஜய் இதுவரை ஒரு தேர்தலை கூட சந்திக்கவில்லை. ஒரு தேர்தலிலாவது போட்டியிட்டு வாக்கு சதவிகிதத்தை நிரூபிக்கட்டும். மற்ற கட்சிகள் அனைத்தும் தேர்தலில் போட்டியிட்டு வாக்கு சதவிகிதத்தை நிரூபித்திருக்கிறார்கள். விஜய் முழுக்க முழுக்க ரசிகர்களை நம்பி மட்டுமே இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

# அனைத்து பள்ளி மாணவிகளுக்கும் இலவசமாக

# சானிட்டரி பேட்களை பள்ளிகள் வழங்க வேண்டும்; உச்சநீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி: மாதவிடாய் ஆரோக்கியம் ஓர் அடிப்படை உரிமை என்று தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம், அனைத்து பள்ளி மாணவிகளுக்கும் இலவசமாக சானிட்டரி பேட்களை பள்ளிகள் வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு மத்திய அரசின் பள்ளி செல்லும் மாணவிகளுக்கான மாதவிடாய் சுகாதாரக் கொள்கையை நாடு முழுவதும் அமல்படுத்தக்கோரி ஜெயாதாக்கூர் என்பவர் கடந்த டிச.10, 2024-ல் தாக்கல் செய்த பொது நல மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு, இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் அந்த உத்தரவில், "தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மட்கும்தன்மைகொண்ட மாதவிடாய் சானிட்டரி பேட்கள் இலவசமாக வழங்கப்படுவதை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உறுதி செய்ய வேண்டும். மாதவிடாய் ஆரோக்கியம் ஓர் அடிப்படை உரிமை. அரசியலமைப்பின் 21-வது பிரிவின் கீழ் உள்ள வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி இது.

அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தனித்தனி கழிப்பறைகள் இருப்பதை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற கழிப்பறைகள் வழங்கப்பட வேண்டும்.

கழிப்பறைகள் மற்றும் சானிட்டரி பேட்கள் வழங்குவதை உறுதிப்படுத்த அரசாங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும். இந்த வசதிகளை தனியார் பள்ளிகள் வழங்கத் தவறினால் அவற்றின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டது.




# தங்கம் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ.7,600 குறைவு



சென்னை: 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ.7,600 குறைந்து ரூ.1,26,800-க்கு விற்பனையாகிறது.

கடந்த ஆண்டு தொடக்கம் முதல் தங்கம் விலை அதிகரித்து வந்தாலும் அவ்வபோது சற்று குறைந்து பொதுமக்களுக்கு ஆறுதல் அளித்தது.

ஆனால் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒரு சவரன் விலை ரூ. 1 லட்சத்தை தாண்டும் என நிபுணர்கள் கணித்திருந்தனர். அந்த கணிப்பை உறுதிப்படுத்துவது போன்றே கடந்த ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதியே அதுவரை வரலாற்றில் இல்லாத வகையில் புதிய உச்சமாக சவரன் ரூ.1,04,800-ஐ தொட்டது.

2025 ஆம் ஆண்டை போலவே 2026 ஆம் ஆண்டும் தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் தான் இருக்கும் என நிபுணர்கள் கணித்துள்ளனர். அதன்படி ஒரு சவரன் விலை விரைவில் ரூ. 2 லட்சத்தை தொட வாய்ப்பிருப்பதாகவும் கூறியிருக்கின்றனர்.

ஒரே நாளில் இரண்டு முறை குறைந்த தங்கம்

22 காரட் ஆபரண தங்கத்தின் விலை நேற்று ஒரே நாளில் வரலாறு காணாத வகையில், சவரனுக்கு ரூ.9,520 அதிகரித்து ரூ.1,34,400 விற்பனையானது. இந்நிலையில் (ஜன.30) காலை சவரனுக்கு ரூ.4,800 குறைந்து ரூ.1,29,600-க்கு விற்பனையானது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக இன்று பிற்பகல் சவரனுக்கு ரூ.2,800 குறைந்து ஒரு சவரன் ரூ.1,26,800-க்கு விற்பனையாகிறது. மேலும் கிராம் ரூ.15,850-க்கு விற்பனையாகிறது.

வெள்ளிவிலைகுறைவு

தங்கம் விலையை போல் வெள்ளி விலையும் இன்று ஒரே நாளில் இரண்டாவது முறையாக குறைந்துள்ளது. நேற்று ஒரு கிராம் வெள்ளி ரூ.25 அதிகரித்து ரூ.425-க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று ஒரு கிலோ வெள்ளி ரூ.25,000 அதிகரித்து, ரூ.4,25,000-க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்று காலை வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ரூ.415-க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து இன்று பிற்பகல் மேலும் கிராமுக்கு 10 ரூபாய் குறைந்து ரூ.405-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல் ஒரு கிலோ வெள்ளி 10 ஆயிரம் குறைந்து ரூ.4,05,000-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# அ.தி.மு.க.வில் நான் தயார் என்னை சேர்ப்பதற்கு அவர்கள் தயாரா? என பெரியகுளம் பண்ணை வீட்டில் ஓபிஎஸ். பேட்டி

தேனி மாவட்டம் பெரியகுளம் பண்ணைவீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்த மனோஜ் பாண்டியன் மற்றும் வைத்தியலிங்கம் தான் காரணம் அவர்களே சென்று விட்டார்கள் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய நான் ரெடி என பெரியகுளம் பண்ணை வீட்டில் ஓபிஎஸ் பேட்டி தொலைக்காட்சி செய்தித்தாள்கள் youtube சேனல்களில் குழப்பங்களை ஏற்படுத்தும் செய்திகளை பரப்ப வேண்டாம் என்றும் ஜனநாயக ரீதியாகவும் தொண்டர்களின் எண்ணங்களை அறிந்தும் தொண்டர்களின் சட்ட போராட்டங்கள் நடத்தி உ ரி மை க ளை மீட்பதற்காக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது தொண்டர்களும் மக்களும் நம் பக்கம் இருக்கிறார்களா என அ றி வ த ற் கே சுயேட்சியாக பலாப்பழம் சின்னத்தில் போட்டியிட்டேன் 12 நாட்கள் மட்டுமே தேர்தல் பிரச்சாரம் செய்தேன் அந்தத் தேர்தலில் தமிழகத்திலிருந்து பல்வேறு பகுதிகளில் ஆறு பேர் ஓ. பன்னீர்செல்வம் என்ற பெயரில் நிற்க வைத்து பெரும்சதியையும்குழப்பத்தையும் செய்தனர் சூ ழ் ச் சி யை ய முறியடிக்கவே தொண்டர்களின் அடிப்படை உரிமைகளைமீட்பதற்கே இந்த இயக்கம் செயல் பட்டு வருகிறது தனி கட்சி துவங்கவில்லை

போட்டியிடுவது பற்றி முடிவெடுக்கவில்லை பிரிந்து கிடைக்கக்கூடிய அதிமுகவின் இடையே அனைத்து சக்திகளையும் எம்ஜிஆர் ஜெயலலிதா உருவாக்கிய அனைத்து சக்திகளும் ஒன்று சேர வேண்டும் என சட்ட போராட்டம் நடத்தி வருகிறேன் இதில் தே வை யி ல் லா ம ல் கு ழ ப் ப ங் க ளை ஏற்படுத்த வேண்டாம் மனதின் குரலாக நான் சார்ந்த மாவட்டமான தேனி மாவட்டத்தில் அதிமுகவினர் அறிந்து கொ ள் வ த ற் கா க வே இந்த கூட்டம் கூட்டப்பட்டது இதே போல் தமிழகம் முழுவதும் மாவட்டசெயலாளர்கள் நிர்வாகிகள் பொதுக்குழு கூட்டம் நடத்தினர் அனைவரும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற கேள்விக்கு பிரிந்திருக்கிறோமோ ஒன்றாகஇருக்கிறோமோ என்பதை கடம்பூர் ராஜு புரிந்து கொள்ள வேண்டும் தேனி மாவட்ட நிர்வாகிகளிடம் மனதின் குரலாக அவர்கள் அனைவரும் எங்களது ஒருங்கிணைந்த குரலாகவே இருக்கின்றனர் மேலும் டிடிவி தினகரன் குறித்து கேட்டபோது டிடிவி தினகரன் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என கூறினார் அதே போல் தான் நானும் அதே தான் என்னுடைய நிலைப்பாடு என்றார் பதவிக்கு வந்தவர் கட்சிக்கு விசுவாசமாக நடப்பதற்கு இது ஒரு நல்ல தருணம் எனக் கூறியிருக்கிறார் ஒன்றிணைக்க வேண்டும் ஒன்றிணைய வேண்டும் என்று தான் என்னுடைய கருத்து நான் தயார் என்னை சேர்ப்பதற்கு அவர்கள் ரெடியாஇந்தகூட்டத்தில் திரளான மாவட்ட நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.





தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அதிமுக கொறடா வழக்கறிஞர் மந்திரமூர்த்தி பேசுகையில்: தூத்துக்குடி பக்கிள் ஓடை ரோட்டில் மேடு பள்ளமாக இருப்பதால் நேற்று இருசக்கர வாகனத்தை சென்ற பள்ளி மாணவன் நிலை தடுமாறி கீழே விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் பொதுமக்கள் பள்ளிக்கு மாணவர்கள் செல்லும் வழி என்பதால் சாலையை உடனடியாக சீரமைக்க வேண்டும். மேலும் பலியான மாணவன் குடும்பத்திற்கு மாநகராட்சி சார்பில் இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று அதிமுக கொறடா வழக்கறிஞர் மந்திரமூர்த்தி தெரிவித்தார்.

# தேசிய அளவிலான Dodge ball விளையாட்டுப் போட்டி துவக்க விழா

## மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே செ ண் டி வ க் க த் தி ல் உள்ள தனியார் பள்ளி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு Dodge ball சங்கம் சார்பில் 18வது சீனியர் தேசிய Dodgeball சாம்பியன்ஷிப் இந்த ஆண்டுக்கான 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும்பெண்கள் கலந்து கொண்ட இந்த விளையாட்டுப் போட்டியினை தமிழ்நாடு Dodgeball ஒருங்கிணைப்பாளர் இளையராஜா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உ று ப் பி ன ர் மரகதம் குமரவேல் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து டாஸ் போட்டு போட்டியினை விளையாடி துவக்கி வைத்தார்.

இந்த விளையாட்டு போட்டியில் தமிழ்நாடு ஆந்திரா கேரளா

உத்தரபிரதேசம் மகாராஷ்டிரா உள்ளிட்ட 16 மாநிலங்களில் இருந்து Dodgeball போட்டியில் 30 அணியினர் கலந்துகொண்டு

மூன்று நாட்கள் விளையாட உள்ளனர் .இந்தநிகழ்ச்சியில்ஆசிய Dodgeball கூட்டமைப்பு தலைவர் பிரார், செண்டிவாக்கம் தனியார் பள்ளி தாளாளர் மரிய பிராங்ளின்பிரபு,ஆசிய Dodge ball கூட்டமைப்பு தலைவர் சந்திர போஸ், செஞ்சிவாக்கம் தனியார் பள்ளியின் தலைமை ஆசிரியை பாரதி, தமிழ்நாடு டாட்ஜ்பால் இணை ஒருங்கிணைப்பாளர் விளையாட்டுக் குழு பிரதாப், சுனில்பாஸ்கரன், தருன் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



# கோவை மாநகராட்சி 1வது வார்டு மக்கள் சபை கூட்டம் துடியலூர் மாநகராட்சி பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது

## தீர்மானங்கள் நிறைவேற்றி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பு

கோவை மாநகராட்சி 1-வது வார்டு மக்கள் சபை கூட்டம் துடியலூர் மாநகராட்சி பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது.மாமன்ற உறுப்பினர் கற்பகம் இராஜசேகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றி மாநகராட்சி ஆ ணை ய ா ள ரு க் கு அனுப்பிவைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் உள்ள வார்டுகளில் வார்டு மக்கள் சபை கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை மாநகராட்சி 1-வது வார்டு மக்கள் சபை கூட்டம் துடியலூரில் உள்ள மாநகராட்சி பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது.

மாமன்ற உறுப்பினர் கற்பகம் இராஜசேகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உதவி பொறியாளர்கள் ஜெயின்ராஜ், வெங்கடாசலம், சுகாதார மேற்பார்வையாளர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 1 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். இதற்கு பதில் அளித்து பேசிய மாமன்ற உறுப்பினர் கற்பகம் இராஜசேகரன் தொடர்ந்து நமது பகுதியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், குடிநீர் பிரச்சினை முழுமையாக சரி செய்துள்ளதாகவும், சுகாதார ப ணி க ளை யு ம் தொடர்ந்து சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாநகராட்சி ஆணையாளருக்கு குப்பை சேகரிக்கும் டாட்டா ஏஸ் வாகனம் கூடுதலாக வழங்க வேண்டும். குப்பை சேகரிக்கும்டிப்பர்லாரி கூடுதலாக ஒன்று வழங்க வேண்டும்.கொசுமருந்து தெளிக்கும் மிஷின் கூடுதலாக ஒன்று வழங்க வேண்டும். வடிகால் சுத்தம் செய்யும் பணிக்கு கூடுதல் பணி ய ா ள ர் க ளை , குறைந்தபட்சம் பத்து நபர்களை வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது.

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் தொளசம்பட்டியில் நடைபெற்றது

சேலம் மாவட்டம் ஓமலூர்அருகேஉள்ள தொளசம்பட்டி பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைபள்ளியில், நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடை பெற்றது.



இந்த முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை. எலும்பி யல், மகப்பேறு உள்ளிட்ட பல்வேறு மருத்துவம் பார்க்கப்பட்டது.முழு உடல் பரிசோதனை செய்து மருத்துவர்கள் ஆ லோ ச னை க ள் வழங்கி, மருந்து மாத்திரை களும் வழங்கப் பட்டது. மாற்றுத்திறனாளிளுக்கு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங் கப்பட்டது. இதில், கிராமப்புறங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டனர். முகாமில், வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர், திமுக ஒன்றிய ஓமலூர் தெற்கு செயலாளர்கள் செல்வகுமரன், ராஜஅய்யப்பன், தலைமைபொதுக்குழு உ று ப் பி ன ர் குப்புசாமி,மாவட்ட துணை செயல ளர் திருநாவுக்கரசு. ஒன்றிய துணை செயலாளர் சுலோச்சனா மற்றும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள்கலந்துகொண்டனர்.

# ‘தமிழகத்தில் அன்றாடம் சீரழியும் சட்டம் ஒழுங்கு’ கடலூர் சம்பவத்துக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை:

'தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்னும் வார்த்தை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறதா? அல்லது ஒட்டுமொத்தமாக சமாதி கட்டப்பட்டுவிட்டதா?' என கடலூர் விவசாயியை பெட்ரோல் ஊற்றி எரிக்க முயன்ற சம்பவத்துக்கு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கடலூர் மாவட்டம் மாளிகம்பட்டு கிராமத்தில் நட்டநடு சாலையில் வைத்து 70 வயதான விவசாயி ஒருவரை மர்ம கும்பல் பெட்ரோல் ஊற்றி எரிக்க முயற்சித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்னும் வார்த்தை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறதா? அல்லது ஒட்டுமொத்தமாக சமாதி கட்டப்பட்டுவிட்டதா? தலைநகரிலும் பாதுகாப்பில்லை. கிராமத்திலும் பாதுகாப்பில்லை. பச்சிளம் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை.வயதானமுதியவருக்கும்பாதுகாப்பில்லை! வீட்டிலும் பாதுகாப்பில்லை, சாலையிலும் பாதுகாப்பில்லை.

இத்தகைய கொடூர ஆட்சியை மீண்டுமொரு முறை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்து, மீண்டும் ஒரு நரக வேதனையைமக்கள்அனுபவிக்கத்தயாராகஇல்லை! திமுகவை வெளியேற்றி, தமிழகத்தை மீட்கும் தினம் தொலைவில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# பங்குச்சந்தை: 500 புள்ளிகள் குறைந்த சென்செக்ஸ்; ஐடி, உலோகப் பங்குகள் சரிவு



பங்குச் சந்தைகள் இன்று(ஜன. 30, வெள்ளிக்கிழமை) சரிவுடன் தொடங்கி வர்த்தகமாகி வருகின்றன. ஐடி மற்றும் உலோகக் குறியீடுகள் அதிக சரிவைச் சந்தித்து வருகின்றன.

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் இன்றுகாலை81,947.31என்றபுள்ளிகளில்தொடங்கிய நிலையில் காலை 11.40 மணியளவில் சென்செக்ஸ் 493.29 புள்ளிகள் குறைந்து 82,073.08 புள்ளிகளில் வர்த்தகமாகிறது.

அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 153.90 புள்ளிகள் குறைந்து 25,265.00 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது.

சென்செக்ஸ் பங்குகளில் டாடா ஸ்டீல், இன்ஃபோசிஸ், ஐசிஐசிஐ வங்கி, எச்சிஎல் டெக், டெக் மஹிந்திரா ஆகிய நிறுவனங்களின் பங்குகள் 5 சதவீதம் வரை சரிவைச் சந்தித்தன.

மறுபுறம் ஐடிசி, எஸ்பிஐ, பாரத் எலக்ட்ரானிக்ஸ், அதானி போர்ட்ஸ், ஆக்சிஸ் வங்கி ஆகியவை 0.67 சதவீதம் வரை உயர்ந்து வர்த்தகமாகின.

நிஃப்டி மிட்கேப் குறியீடு 0.08 சதவீதம் சரிந்த நிலையில் ஸ்மால்கேப் குறியீடு 0.42 சதவீதம் உயர்ந்தது.

துறைவாரியாகப் பார்க்கும்போது, நிஃப்டி மெட்டல் குறியீடு 3.5 சதவீதத்தி ற்கும் மேல் சரிந்து பெரும் இழப்பைச் சந்தித்தது. நிஃப்டி ஐடி பங்குகளும் சரிவைச் சந்தித்து வருகின்றன.

கடந்த 3 நாள்கள் பங்குச்சந்தை உயர்வுடன் வர்த்தகமான நிலையில் இன்று சரிவுடன் வர்த்தகமாகின்றன. பிப். 1 ஆம் தேதி 2026- 2027 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதையொட்டி அன்று பங்குச்சந்தைகள் வர்த்தகம்நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் பார்க் கல்வி நிறுவனங்களில் பிரம்மாண்ட உலக சாதனை, மின்னணு கழிவுகளை கூகுள் சீட்டில் வகைப்படுத்தி மாணவர்கள் அசத்தல்.

கோயம்புத்தூர் கருமத்தம்பட்டியிலுள்ள பார்க் கல்வி நிறுவனங்கள் மற்றும் கிரீன் எரா இணைந்து நடத்திய மின்னணு கழிவுகளை (E-Waste) அடையாளம் கண்டு வகைப்படுத்தும் உலக சாதனை முயற்சி ம நடைபெற்றது.இந்தநிகழ்வில் ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்கள் ஒரே நேரத்தி ல் பங்கேற்று ,மின்னணு கழிவுகளை அவற்றின் தன்மைக்கேற்ப மறுபயன்பாடு, மறுசுழற்சி, அபாயகரமானவை மற்றும் நிலப்பரப்புக் கழிவுகள் என நான்கு பிரிவுகளாகத் தரம் பிரித்து புதிய உலக சாதனை படைத்தனர்.இதற்காக ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் முறையான சரிபார்ப்புப் பட்டியல்கள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் துல்லியமாக வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டது. மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் ஆதரவுடன், கருமத்தம்பட்டி வளாகத்திலுள்ள பிரேமா ரவி அரங்கில் நடைபெற்ற இந்த சாதனை முயற்சியை 'வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் யூனியன்' அமைப்பின் நடுவர்கள் நேரில் ஆய்வு செய்து அந்த அமைப்பைச் சேர்ந்த ரெக்கார்ட் மேனேஜர் கிறிஸ்டோபர் கிராப்ட் சாதனையை அங்கீகரித்து சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.இதுகுறித்து பேசிய அனுஷா ரவி சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், மின்னணு கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை இளைஞர்களிடையே ஏற்படுத்தும் வகையிலும் நடத்தப்பட்ட இந்தநிகழ்வு, கல்வி நிறுவன வரலாற்றில் மைல்கல்லாக அமைந்தது என தெரிவித்தார்.



# திட்டக்குடி அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் ரத்ததான முகாம்

கடலூர் மாவட்டம் திட்டக்குடிஅரசுகலைக்கல்லூரியில் பெண்ணாடம் அரிமா சங்கம், திட்டக்குடி அரசு மருத்துவமனை, விருத்தாசலம் அரசு ரத்த வங்கி மற்றும் திட்டக்குடி அரசு கலைக்கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய மாபெரும் ரத்ததான முகாம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இம்முகாமினை அரசு மருத்துவமனை ரத்த வங்கி தலைமை மருத்துவர் K. குலோத்துங்கன், பெண்ணாடம் அரிமா சங்க சாசன தலைவர் மு. ஞானப்பிரகாசம், மாவட்டத் தலைவர் லயன் TVKV. சக்திவேல், அரசு கலைக்கல்லூரி முதல்வர் க. மணிகண்டன்,

பசுமை தூண்கள் இயக்க தோழர் அறிவு மற்றும் அரசு மருத்துவமனை மருந்தாலுநர் KS. முருகானந்தம் ஆகியோர் செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் இணைந்து தொடங்கிவைத்து ஒருங்கிணைத்தனர்.

கல்லூரி மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு ரத்தக்கொடை அளித்த இம்முகாமில் மொத்தம் 58 யூனிட் ரத்தம் சேகரிக்கப்பட்டு அரசு ரத்த வங்கிக்கு வழங்கப்பட்டது; ரத்ததானம் செய்தவர்களுக்கு பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பாக நினைவு பரிசுகளும் பழச்சாறும் வழங்கப்பட்டதோடு, அரசு ரத்த வங்கி சார்பாக பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



ஈரோடு வருகை தந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலாளர், தமிழ்நாடு & புதுச்சேரி மேலிட பார்வையலருமான நிவேதிக் ஆலவா அவர்கள் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்திற்கு நேற்று 30.01.2026இல் வருகை புரிந்த போது ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா வரவேற்று பொன்னாடை அணிவித்தார்.உடன் ஈரோடு மாவட்ட ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா உள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (30.01.2026) ஈரோடு மாநகராட்சி, பரிமளம் மஹால் அருகில் மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறையின் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லையினை அரசு பேருந்தில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (30.01.2026) ஈரோடு மாநகராட்சி, பரிமளம் மஹால் அருகில் மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறையின் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லையினை பள்ளி வாகனத்தில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.

## சிவகாசி பகுதியில் 3.0 ரிக்டர் நில அதிர்வு!

சிவகாசி சுற்றுவட்டாரத்தி ல் நேற்று இரவு பல்வேறு இடங்களில் 3.0 ரிக்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டதால், பொதுமக்களி டையே பதற்றம் ஏற்பட்டது. விருதுநகர் மாவட்டம் சிவகாசி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டாசுஆலைகள் இயங்கி வருகின்றன. சில நேரங்களில் பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்படும்போது, அதைச் சுற்றியுள்ளகிராமங்களில் நில அதிர்வுகள் ஏற்படுவது வழக்கம்.

ஆனால் நேற்று எந்த பட்டாசு ஆலையிலும் வெடிவிபத்து ஏற்படவில்லை. 9 மணியளவில் 3.0 ரிக்டர் அளவில் சிவகாசி, வில்லிபுத்தூர், ராஜபாளையம், வெம்பக்கோட்டை, தாயில்பட்டி, சாத்தூரில் திடீரென நில அதிர்வு ஏற்பட்டது.

இதனால் வீட்டிலிருந்த பொருட்கள் கீழே விழுந்ததால், பொது மக்கள் அச்சமடைந்தனர். இதுகுறித்து, பேரிடர் மேலாண்மை துறையினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்காச்சோளத்தில் படைப்பு முவைக் கட்டுப்படுத்தும் "புஷ் & புல்" (Push and Pull) தொழில்நுட்பம் பற்றி விளக்கிய மதுரை வேளாண் கல்லூரி மாணவி



மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி அருகே உள்ள பி.சுப்பல்லாபுரம் கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவி நிவேதா ஸ்ரீ. ப, ஊரக வேளாண் பணி அனுபவத்திட்டதின் (RAWE) கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு மக்காச்சோளப் பயிரில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் படைப்புழு (Fall Army Worm) தாக்குதலை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் நோக்கில், "புஷ் & புல்" (Push and Pull) தொழில்நுட்பம் குறித்து பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில், பூச்சிகளை விரட்டும் (Push) மற்றும் பூச்சிகளை ஈர்க்கும் (Pull) தாவரங்களைப் பயன்படுத்தி, மக்காச்சோளத்தில் படைப் புழுவின் தாக்குதலை குறைக்கும் முறைகள் விளக்கப்பட்டன. மக்காச்சோள வரிசைகளுக்கிடையில் "டெஸ்மோடியம்" போன்ற விரட்டித் தாவரங்களை (Push crops) வளர்ப்பதன் மூலம் புழுக்களைப் பயிரில் இருந்து விலக்க முடியும்.அதே நேரத்தில், வயலின் ஓரங்களில் "பிராகியேரியா புல்/ எருமை புல்" போன்ற ஈர்ப்புத் தாவரங்களை (Pull crops) வளர்ப்பதால், புழுக்கள் அங்கு சென்று தாக்குவதால் மக்காச்சோளம் பாதுகாக்கப்படுகிறது.

பயிற்சியில்,

- படைப்புழுவின் அடையாளங்கள்.
- தாக்குதலின் நிலைகள்.
- புஷ் & புல் முறையின் செயல்முறை.
- ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைக்கும் வழிகள்.
- செலவுக் குறைவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.

இந்த தொழில்நுட்பத்தை பின்பற்றுவதன் மூலம், ரசாயன மருந்துகளின் பயன்பாடு குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன், மக்காச்சோள விளைச்சல் அதிகரிக்கும் என்பதையும் பயிற்சியில் எடுத்துரைத்தார் நிவேதா ஸ்ரீ.ப.

பங்கேற்றவிவசாயிகள் இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், தங்கள் வயல்களில்புஷ்&புல்முறையை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.

# ஈரோடு ஈ.கே.எம்.அப்துல் கனி மதரசா இஸ்லாமியர் பள்ளியில் கடந்த 2004, 2005 ஆண்டு படித்து வெளிவந்த முன்னாள் மாணவ மாணவிகள் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளியில் நடைபெற்றது



ஈரோடு ஈ.கே.எம்.அப்துல் கனி மதரசா இஸ்லாமியர் பள்ளியில் கடந்த 2004–2005 ஆண்டு படித்துவெளிவந்தமுன்னாள் மாணவ மாணவிகள் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளியில் நடைபெற்றது.

இதுசுமார்நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் மாணவிகள் ஆசிரியர்கள் தங்கள் மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். இதில் பேசிய பள்ளியின் தாளாளர்

அல்ஹாஜ்.G.முகமது தாஜ் முஹ்யித்தீன் பேசும்போது இப்பள்ளியில் படித்த அனைவருமே ஆசிரியர் மற்றும் எங்களுக்கு பிள்ளைகள் தான் எத்தனை ஆண்டுகள் கழித்து வந்தாலும் அதேபாசத்துடன் மாணவர்களும் மாணவிகள்

பழகி வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் மாணவிகள் தங்களுடைய நிதி நிலைக்கேற்ப தற்போது படித்து வரும் மாணவ மாணவிகள் யாராவது ஒருவரை மேல்நிலைக்கல்வி வரை கல்லூரி படிப்பு வரை அவர்களை படிக்க வைப்பதற்கு

தத்தெடுத்து கொண்டால் நன்றாக இருக்கும் என்றும் என்னால் அரசு பள்ளியில் படித்து வரும் மாணவ மாணவிகள் அனைவரும் ஏழ்மை நிலையில் இருந்து அப்படி தொடர்வதால் இது மாணவர்களுக்கு செய்யும் உதவி என்றும் கல்விக்கு செய்யும் தொண்டு வாழ்நாள் முழுவதும் மிகப்பெரும் பாக்கியத்தை தரும் என்பதால் இதை முன்னாள் மாணவர்கள் செயல்பட வேண்டும் என அறிவுரை கூறினார்.

மேலும் முன்னாள் மாணவர்கள் கூறும் போது எத்தனை ஆண்டுகள் படித்து வந்தாலும் ஆசிரியர்களை பார்க்கும்போது தங்களுக்கு ஒரு பயம் கலந்த மரியாதை ஏற்படுத்துவதாகவும் தங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய ஆசிரியர்கள் நீண்ட ஆயுளுடனும் மற்றும் மாணவர்களுக்கு போதிக்க வேண்டும் எனும் கேட்டுக் கொண்டனர் மேலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் முன்னாள் மாணவ மாணவிசார்பில்நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இப்பள்ளியில் இருந்த மறைந்த ஆசிரியர்களுக்கு மற்றும் மாணவர்கள் மௌன அஞ்சலையும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் E.K.M.தாஜ் முகமது கலீல்,ஹாஜி.முனைவர் A .முகமது உதுமான் தலைமை ஆசிரியர் உயர்நிலைப்பள்ளி, B.மூசா ராஜா ஜுனைதி தலைமையாசிரியர் மதரஸா இஸ்லாமிய தொடக்கப்பள்ளி முன்னாள் பள்ளி மாணவ -மாணவிகள் கலந்து கொண்டனர்.

### காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு

# மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள காந்தி சிலைக்கு மாணிக்கம் தாகூர் எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்




மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள காந்தி சிலைக்கு விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் எம் பி மாணிக்கம் தாகூர் இன்றுகாந்தியின்நினைவு நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறுகையில்:

வெறுப்பு அரசியலை எதிர்த்து ஒவ்வொரு இந்தியனும் போராடும் காலகட்டம் அமைந்துள்ளது.

திமுக காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை குறித்த கேள்விக்கு:

திமுக நாடாளுமன்ற உறுப்பினர் குழு தலைவர் கனிமொழி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சந்திப்பு நடைபெற்றுள்ளது. அவர்கள் சந்திப்பு பற்றி எதுவும் வெளியில் சொல்லவில்லை. அதனால் அவர்கள் சொல்லும் வரை எல்லாம் கற்பனை கதை தான்.

மதுரையில் திமுக காங்கிரஸ் இடையே எழுந்து வரும் மோதல் குறித்த வடக்கு தொகுதியை கேட்டு பெறுவீர்களா கேள்விக்கு:

வடக்கு தொகுதியை காங்கிரஸ் கட்சி கோரும் அதில் எந்த சந்தேகமும் கிடையாது.வடக்குதொகுதியை கேட்டு பெருவதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் கார்கே சந்தித்து பேசினேன் காங்கிரஸ் கட்சியை யாரெல்லாம் அவமானப்படுத்துகிறார்கள் இழிவாக பேசுகிறார்களோ அவர்களிடம் எந்த ஒரு தயவுசாட்சனையும் பார்க்க வேண்டியதில்லை. எங்களைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியின் கட்சிக்காரர்களின் தன்மானம் ரொம்ப முக்கியம் இதுகுறித்து காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதிவு பெற்றுள்ளார். அமைப்புரீதியாக 85 சதவீதம் முழுவதுமாக சீரமைத்துள்ளோம் ஊராட்சி அமைப்புகள் பி எல் ஏ2 நியமிப்பதில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை பீட்டர் அல்போன்ஸ் தலைமையில் குழு அமைத்து மிகக் கடுமையாக உழைத்து காங்கிரஸ் கட்சி தோழர்கள் அனைவரும் அமைப்பு ரீதியாக பலம் சேர்த்து இருக்கிறார்கள் அப்படிப்பட்ட நிலையில் செல்வபெறுந்தொகை அறிக்கை என்பது காங்கிரஸ் கட்சியை அவதூறாக பேசிய மாவட்ட செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே பதிவை நானும் வலியுறுத்துகிறேன். கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் தொண்டர்களை அவமானப்படுத்தும் செயலை செய்த நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒவ்வொரு கோரிக்கையாக உள்ளது எனக்கு சீட்டு கிடைக்கிறது.சகோதரி ஜோதிமணி சீட்டு கிடைத்தது என்பதெல்லாம் ராகுல் காந்தி முடிவெடுக்க வேண்டும் பிரச்சனை காங்கிரஸ் பூத்து கமிட்டி போட ஆள் இல்லை வார்டு நிர்வாகிகள் ஆளில்லை என்பது இந்த வன்மத்தை கடுமையாக எதிர்க்கிறோம் நிதானமாக இதை கையாளுவோம். செல்வப் பெருந்தகை கூறியுள்ள நடவடிக்கைக்காக காத்திருக்கிறோம்.

முதல்வர் தமிழ்நாடு கூட்டணிக்கும் தேசிய கூட்டணிக்கும் தான் போட்டி என்று முதல்வர் சொல்கிறார் இந்திய கூட்டணி என்று சொல்லவில்லை என்பது குறித்த கேள்விக்கு:

அது அவரிடம் தான் கேட்க வேண்டும் இந்தியா கூட்டணி பாராளுமன்ற தேர்தலுக்கான உருவாக்கப்பட்டது நாங்கள் அப்படித்தான் சொல்கிறோம் யார் சொன்னார்களோ அவர்களிடம் தான் கேட்க வேண்டும்

போஸ்டர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒட்டவில்லை ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட தலைவர் கொடுத்த கேள்விக்கு:

இளைஞர் காங்கிரஸ்காரர்கள் ஒட்டி இருக்கிறார்கள் அவர்களை பாராட்டுகிறேன் தன்மானம் உள்ள இளைஞர் காங்கிரசனை பாராட்டுகிறேன் நான் அவர்களோடு இருப்பேன் தன்மானம் உள்ள இளைஞர் காங்கிரஸ் தம்பிகளுக்கு எனது பாராட்டுக்கள்.

அமைச்சரவையில் பங்கு கேட்பதனால் தான் திமுகவினர் விமர்சனம் வைக்கிறார்களா குறித்த கேள்விக்கு:

அதிகார மமதை இருக்கிற மாவட்ட செயலாளர்களுக்கு இதுதான் தெரியும் கல்லணையில் நடந்து கொண்டிருக்கும் போராட்டம் எல்லோருக்கும் தெரியும் ஊர் மக்கள் திரண்டு கல்குவாரியை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள் செய்யும் விஷயத்தை பேச ஆரம்பித்தோம் என்றால் இன்றைய முழுசும் தாங்காது என்னென்ன பண்ணியிருக்கிறார்கள் இந்த அரசாங்கத்தின் விதிகளை மீறி என்ன பண்ணி இருக்காங்க என்று ஊருக்கே தெரியும் காங்கிரஸ் கட்சிக்காரர்களை அவமானப்படுத்திய மாவட்டச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். திண்டிவனம் புதிய பேருந்து பெயர் மாற்றம் குறித்த சிவி சண்முகம் பேசியது கேள்விக்கு: அன்பு சகோதரர் விஷ்ணு பிரசாத் இதற்காக கடிதம் எழுதியுள்ளார். நல்ல முடிவு எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது. இதுவரை பெயர் வைத்ததாக ஞாபகம் இல்லை எனக்கு தெரிந்தவரை விழுப்புரம் விஷ்ணு பிரசாத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். திறக்காத பேருந்து நிலையத்திற்கு பெயர் வச்சாச்சு என்று அண்ணன் சண்முகம் அதற்காக ஆதங்கப்படுவது என்பது நியாயமாக இருக்காது. அதற்காக போராடுகிறோம் விஷ்ணு பிரசாத் எனது பாராட்டுக்கள் சந்திரசேகரன் தவெக கட்சியில் உறுப்பினராக உள்ள இருக்கிறாரா? அப்பா தம்பி சொல்வதற்கெல்லாம் நான் சொல்ல முடியாது.

வடக்கு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர்கள் விருப்பமான தாக்கல் செய்து உள்ளார்களா கொடுத்த கேள்விக்கு:

வடக்கு தொகுதியில் ஏற்கனவே காங்கிரஸ் வேட்பாளர்கள் நின்று உள்ளார்கள். தொடர்ந்து காங்கிரஸ் கட்சி பலமாக உள்ள தொகுதி அது அமைப்பு ரீதியாக 13ம் தேதிக்கு பிறகு பூத் கமிட்டி கூட்டம் போடுவோம் காங்கிரசின் பலத்தை காட்டுவோம் சும்மாவிடுவோம் என்று நினைக்கிறீர்களா சும்மா பார்த்துட்டு போகும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வந்தேமாதர ஜெய் மட்டும் சொல்பவர்கள் கிடையாது. திருப்பி அடிக்க தெரியும்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (30.01.2026) ஈரோடு மாநகராட்சி, பரிமளம் மஹால் அருகில் மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறையின் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லையினைஅரசுபேருந்தில்ஒட்டிவிழிப்புணர்வுஏற்படுத்தினார்உடன்மாவட்டகாவல்கண்காணிப்பாளர்அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.

ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி தலைமையில்

# மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினத்தை முன்னிட்டு, தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (30.01.2026) உத்தமர் மகாத்மா காந்தியடிகள் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை அனைத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி தலைமையில், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியான,

"இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ,தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்" என்று அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

நேர்முக உதவியாளர்(பொது) முன்னதாக, மாவட்ட ஆட்சியரின் தேன்மொழி தலைமையில் இந்திய சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு 2 நிமிட மௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# A new video, 3 theories, CID probe: 5 crucial points on Ajit Pawar plane crash





*The crash has set in motion a political whirlwind in Maharashtra, with the Nationalist Congress Party scrambling for a new leader.*

*On Wednesday morning, Maharashtra deputy chief minister Ajit Pawar, along with four others – his personal security officer Vidhit Jadhav, pilot-in-command Sumit Kapur, first officer Shambhavi Pathak and cabin crew member Pinky Mali -- boarded the ill-fated VT-SSK Learjet 45 business jet to go to Baramati which crashed while landing in a tragedy that killed all of them. While the ministry of civil aviation has launched a probe into the matter and has recovered the black box of the aircraft to ascertain what led to the tragedy, several videos and witness accounts of the crash have been surfacing, giving a glimpse into different angles of the plane crash, also sparking several theories surrounding the crash.*

*The crash has set in motion a political whirlwind in Maharashtra, with the Nationalist Congress Party (NCP) scrambling for a new leader and a potential replacement for Ajit Pawar, one of the key figures in Maharashtra politics who was also lovingly known as 'Dada' among his supporters and party workers. The hometowns and families of those who were on the flight along with Pawar are also grief-stricken, recovering from the loss. These are five major points into the tragedy-*

*CID probe – Maharashtra government ordered a probe into the Baramati plane crash which led to the death of Ajit Pawar, which will be carried out by the state's Criminal Investigation Department (CID). The agency will carry out its probe based on the findings of the Aircraft Accident Investigation Bureau (AAIB) inquiry. The state police have also filed an accidental death report (ADR) in connection with the plane crash with the Baramati taluka police station, said a senior police officer from the Pune rural police, reported news agency PTI. According to a CID official, the case is usually handled by them when an influential public figure dies in an accident, the report added. New CCTV footage emerges – A new video of the plane crash has emerged, which captured the last moments of the VT-SSK Learjet 45 plane Ajit Pawar was travelling in. In the video, the plane is seen turning sideways midair as it plummets to the ground, followed by a huge explosion leading to a fireball and thick clouds of smoke. The footage appears to show the aircraft's left wing dropping suddenly, moments before impact, and also sparked three major theories by experts into what could have gone wrong. Take a look at the CCTV footage here-*

*hethreetheoriessurrounding Ajit Pawar plane crash – The visuals shown in the video have led experts to believe that there could be three possible theories about what actually happened that led to the crash – an aerodynamic stall, a hard banking too close to ground, or an engine failure, as reported by Hindustan Times earlier. An aerodynamic stall means when an aircraft loses altitude when its speed or angle, or both, are in such a state that its wings stop producing lift.*

*The second possible theory is that of engine failure, to support which, Mark D Martin of Martin Consulting, an aviation advisory firm told HT, "The Learjet 45 is a very fast aircraft and it is not designed to fly well at low speeds, especially during landing. From what I have seen, it appears that the aircraft suffered an engine failure while coming into land. When one engine fails, the power from the other engine can pull the aircraft to one side."*

*The third possible explanation, according to an expert who spoke on condition of anonymity is that "it appears to be a late viewing of the runway and trying to get to it with a large bank angle." However, it must be noted that the exact cause will only be ascertained after a thorough probe.*



இந்தியதிருநாட்டிற்குசுதந்திரம்பெற்றுதந்ததேசதந்தைமகாத்மாகாந்தி 79வது நினைவுதினத்தையொட்டி தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாநகர் கருங்கல்பாளையத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி. சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஜி வெங்கடாஜலம், ஈரோடு மாநகராட்சியின் துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார், மற்றும் மண்டலக்குழு தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (30.01.2026) ஈரோடு மாநகராட்சி, பரிமளம் மஹால் அருகில் மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறையின் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லையினை ஆட்டோவில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி "என் ஊர் என் கனவு" (இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்டம் தயாரிப்பதற்கான) மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டத்தினை துவக்கி வைத்து கலந்துரையாடினார்





அமைச்சர் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை ரோடு பரிமளம் மஹாலில் நேற்று (30.01.2026) "என் ஊர் என் கனவு" (இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்டம் தயாரிப்பதற்கான) மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டத்தினை துவக்கி வைத்து கலந்துரையாடினார்.

வீட்டுவசதி,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துச்சாமி

பேசும்போது தெரிவித்தாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பாக பள்ளி குழந்தைகள் சோர்வின்றி படித்திட காலை உணவு திட்டத்தை செயல்படுத்தி அதன் மூலம் மாணவ, மாணவியர்களின் வருகை அதிகரித்துள்ளதுடன், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதும் அதிகரித்துள்ளது. மேலும், அரசு பள்ளியில் படித்து 12 வகுப்பு முடித்து உயர்கல்விக்கு செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைபெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம் ஆகியவற்றின் மூலம் உயர்கல்விக்கு செல்லும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கைஅதிகரித்துள்ளது. மேலும், மாணவ மாணவியர்கள் உடல், மனம்ஆரோக்கியத்தை காத்திடும் வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், விளையாட்டுத்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, சிவகிரியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் அரசு சிக்கய்ய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறு விளையாட்டு அரங்கம், மிகப்பெரிய நூலகம். போட்டித்தேர்வுகளுக்கு பயில பயிற்சி மையம் ஆகியவையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

"என் ஊர் என் கனவு திட்டம்" என்பது தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறப்பான திட்டமாகும். இந்த திட்டம் ஊரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டுள்ளது.

தங்கள் சொந்த ஊரில் உள்ள பள்ளிகள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும்பொது இடங்களை மேம்படுத்த நிதி அல்லது தொழில்நுட்ப உதவி வழங்க வழிவகை செய்வதாகும். இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் தார் சாலைகள்,தெருவிளக்குகள். பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அமைத்தல், ஊர்களில் மரக்கன்றுகள் நடுதல், நீர்நிலைகளைத் (குளம், ஏரி) தூர்வாருதல் போன்ற சுற்றுச்சூழல் பணிகளையும், மேலும், நமது ஊர் முன்னேற நாம் ஊரில் பிறந்து வளர்ந்த மக்களும் தங்கள் "கனவு ஊரை" உருவாக்க ஒரு வாய்ப்பாக இந்தத் திட்டம் விளங்குகிறது. இது ஊர் மீதான பற்றை அதிகரிப்பதோடு, நவீன வசதிகள் கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும் இத்திட்டம் பேரூதவியாக இருக்கும். மேலும், இக்கலந்தாய்வுக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரும்இங்குவழங்கப்படும் அறிய கருத்துகளை எடுத்துக்கொண்டு பயன்படுத்திக் கொள்ளுமாறும் மேலும், தங்களுடைய கருத்துகளை எங்களுக்கும் விண்ணப்பமாக எழுதி வழங்கவேண்டுகிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாநகராட்சிதுணைமேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட சாதனையாளர்கள், சமூக ஊடகவியலாளர், தொழில்துறையினர், தொண்டு நிறுவனங்கள் உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மியான்மரைச் சேர்ந்த 11 பேருக்கு சீனாவில் மரண தண்டனை



சீனா-மியான்மர் எல்லையில் செயல்படும் ஒரு கும்பல் 1 பில்லியன் டாலரை விட அதிக மதிப்பில் சூதாட்டம் மற்றும் டிஜிட்டல் மோசடியில் ஈடுபட்டுள்ளது.மேலும் சீனர்கள் 14 பேர் இந்த கும்பலால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கும்பலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேரை கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் சீன அதிகாரிகள் கைது செய்தனர். இவர்களுக்கு கடந்தாண்டு செப்டம்பரில் மரணதண்டனைவிதிக்கப்பட்டது. இதை எதிர்த்து இவர்கள் மேல் முறையீடு செய்தனர்.

இதை சீன நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்து சூதாட்ட கும்பலைச் சேர்ந்த 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக நீதிமன்றம் நேற்று அறிவித்தது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.